## கோத்தாபயவுக்கு எதிராக வற்புறுத்தியே வாக்குமூலம்

### நிஸங்க கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 2

முன்னாள் பாதுகாப்பு செயலரும், தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக்சவுக்குச் சாக்கு நிறையப் பணம் கொடுத்ததாகக் கூறும்படி வற்புறுத்தப்பட்டேன் என்று அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் மேஜர் நிஸங்க சேனாதிபதி சாட்சியமளித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியம் வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலிக் கடலில் நிறுத்தப்பட்டிருந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பாக விசாரணை நடத்திய இலஞ்ச ஆணைக்குழு அதிகாரிகளே இவ்வாறு வற்புறுத்தினர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் மேலிடத்தில் இருந்து கிடைத்த ஆலோசனைக்கு அமைய இந்தச் சாட்சியத்தை அந்த அதிகாரிகள் வற்புறுத்திப் பெற்றுக் கொண்டார்கள் என்றும் நிஸங்க தெரிவித்துள்ளார். (எ-ரி1)

# சிறையிலிருந்தே குற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதி கோத்தாபய பணிப்பு

கொழும்பு, ஜூன் 2

பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்களால் சிறைச்சாலைகளுக்குள் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

சிறைச்சாலைகளின் உள்ளக நிலைமைகள் தொடர்பாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சிறப்புக் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் என அவரது ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



நாட்டுக்குள் இடம்பெறும் பெரும்பாலான குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் சிறைச்சாலைகளில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன என்று தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக மக்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயம் தொடர்பாகக் கவலையடைகின்றேன். இந்த நிலைமை சீர்ப்படுத்தப்பட வேண்டும். சிறைச்சாலைகளுக்குள் தொலைபேசி பயன்படுத்துவது முழுமையாக நிறுத்தப்பட வேண்டும். சிறைச்சாலை மற்றும் பொலிஸ் துறைகள் பலவீனம் அடைவதன் மூலம் நாட்டின் சட்டத்தை நிலை நாட்டுவதில் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

சிறைச்சாலை திணைக்களத்துக்குள் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஊழல் மற்றும் செயற்றிறன் அற்ற அதிகாரிகளைக் கண்டறிந்து அவர்கள் தொடர்பான சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அந்தக் கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். (எ-ரி1)

## மின்சாரம் தாக்கி விவசாயி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூன் 2

மாட்டுப் பட்டியைப் பார்க்கச் சென்ற விவசாயி ஒருவர் யானைக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் இன்று அதிகாலை மட்டக்களப்பு வெல்லாவெளிப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

தும்பங்கேணி, திக்கோடையைச் சேர்ந்த சீனித்தம்பி சந்திரசேகரம் (வயது59) என்பவரே உயிரிழந்துள்ளார். அந்தப் பகுதி விவசாயிகளால் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பற்ற மின்சார வேலியில் சிக்கியே இவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் தற்போது களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி1)

## பாரவூர்தியின் பாகங்களை திருட முயன்றவர் கைது



ஹற்றன், ஜூன் 2

பார ஊர்தி ஒன்றின் பாகங்களைத் திருட முயன்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. ஹற்றன், நோர்ட்டன் பிரதான வீதியில் காஸல்ரீ பகுதியில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியின் பாகங்களையே சந்தேகநபர் திருட முயன்றார் என்று கூறப்படுகின்றது.

மக்கள் அவரைப் பிடிக்க முயன்றபோது அவர் தேயிலைத் தோட்டத்துக்குள் ஒளித்துக்கொண்டார் என்றும், மக்கள் அவரைத் தேடிப் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஹற்றன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து சந்தேகநபரைக் கைது செய்தமையுடன், சந்தேகநபரின் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (எ-ரி1)



## பள்ளிகளில் தொழுகையில் ஈடுபடுவதற்கு சுற்றறிக்கை

### வெளியிடப்படும் என்கிறார் வக்பு சபை தலைவர்

கொழும்பு, ஜூன் 2

மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் கட்டுப்பாடுகளுடன் அனுமதியளிக்க அரசு தீர்மானித்துள்ளது. பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபடுவது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படும் என வக்பு சபை தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்தார்.

மத வழிபாடுகளுக்காக பள்ளிவாசல்களை மீண்டும் திறக்கும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விசேடமாக ஒரே தடவையில் 30 பேருக்கு தொழுகையில் ஈடுபட இடமளிக்கப்படும். ளுஹர் (நண்பகல் தொழுகை) தொழுகை முதல் இஷா தொழுகைவரை பள்ளிவாசல்கள் திறந்திருக்கும். சுபஹ் தொழுகைக்கான அதானுக்கு 15 நிமிடத்துக்கு முன்னர் பள்ளிவாசல்கள் திறக்கப்பட்டு, 45 நிமிடங்களின் பின்னர் மூடப்படும்.

மீண்டும் ளுஹர் தொழுகைக்கு 15 நிமிடத்துக்கு முன்னர் திறக்கப்படும் பள்ளிவாசல்கள் இஷா தொழுகை வரை திறக்கப்பட்டு, 45 நிமிடத்தின் பின்னர் மூடப்பட வேண்டும். பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட அனுமதி வழங்கப்படும்போதும் கூட்டுத் தொழுகைக்கோ ஜும்ஆ தொழுகைக்கோ அனுமதி இல்லை. தனித்தனியாக சமூக இடைவெளியைப் பேணித் தொழ வேண்டும். அங்கசுத்தியமை (வுளூ) செய்யும் பிரதேசம் (நீர் தாங்கி) மூடப்பட வேண்டும் - என்றார். (ப)

## கட்டுப்பாடை இழந்த கார் மோதி ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, ஜூன் 2

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேருவிலவில் நேற்று மாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார். கந்தளாய், பேராறைச் சேர்ந்த 52 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையே உயிரழந்துள்ளார். பேராறைச் சேர்ந்த 40 வயதுடையவரே படுகாயமடைந்துள்ளார்.



கார் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றுமே விபத்துக்குள்ளாகியுள்ளன. கந்தளாயில் இருந்து, வான்எல நோக்கிப் பயணித்த கார், வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. காரில் பயணித்த நால்வர் மதுபோதையில் இருந்தனர் என்று கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி1)

